# <u>குழித்துறை நகராட்சி</u>

## <u>குழித்துறை நகர்மன்றத்தின் 31-12-2020 வியாழக்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள் மற்றும் தீர்மானம்</u>

**<u>பொருள் எண். 1</u>**

குழித்துறை நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.ச. இராமசுந்தரமணி என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்டுள்ள WP(MD)No.10693/2020-க்கு நகராட்சி சார்பில் ஆஜராவதற்கு திரு.P. ஆதிமூலபாண்டியன் நகராட்சி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/- வழங்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1006/2018/சி1.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3628</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் வழங்கி வருகின்றனர். அதன் ஒருபகுதியாக குழித்துறை நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் SECNDARY STORAGE AND TRANSPORATION செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே குழித்துறை நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (THREE STAR RATING) பெற பள்ளிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், சுய உதவிக்குழுக்கள், குடியிருப்பு நலச்சங்கம் குப்பைகளை அதிகமாக உற்பத்தி செய்பவர்கள், வர்த்தக சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளிடமிருந்து சுயஉறுதிமொழி (Self Declaration) பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்கு உட்பட்ட பொது மக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் உரிய ஆதாரங்களுடன்

அலுவலக வேலை நாட்களில் நேரிலோ அல்லது commr.kuzhithurai@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த அறிவிப்பு செய்த நாட்களுக்குள் எழுத்து மூலமாக பதிவு செய்யலாம் என்பதை தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் விளம்பரம் செய்திட ஆகும் செலவினத் தொகைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.1812/2020/அ2.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3629</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 3</u>

2019-2020-ம் நிதியாண்டிற்கான தணிக்கை தணிக்கை தயார் செய்து வழங்கிய வகையில் ரூ.18,298/- திரு.C. நாகப்பன் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.
அ.கு. அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3630</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மண்டலம் வாரியாக மனித சக்தியினை பயன்படுத்தி தூய்மை பணி மேற்கொள்ள "M/s. Southern Solid Waste Management" என்ற நிறுவனத்திற்கு நகர் மன்ற தீர்மான எண்.3419, நாள் 31-12-2019-ன்படி 01-01-2020 முதல் 31-12-2020 வரையில் ஒராண்டு காலம் உரிமம் நீட்டிப்பு செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் காலம் 31-12-2020 அன்று நிறைவு பெற இருப்பதாலும் மீண்டும் ஒராண்டு காலம் பணி உத்திரவினை நீட்டிப்பு செய்து வழங்குமாறு Southern Solid Waste Management Proprietor 06-11-2020-ல் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்யப்பட்டதில் சுகாதார அலுவலர் அறிக்கையின்படி ஒராண்டு காலம் அந்நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்திட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே "M/s. Southern Solid Waste Management Service" என்ற நிறுவனத்திற்கு 01-01-2021 முதல் 31-12-2021 வரையில் மீண்டும் ஒராண்டிற்கு உரிமகாலம் நீட்டிப்பு செய்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.30118/P3/2017, நாள் 20-12-2017-ன்படி தற்போது உரிமம் பெற்றவர் Southern Solid Waste Management நிறுவனத்திற்கு 3 வருடம் பணி நீட்டிப்பு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. 06-11-2020 தேதிய கடிதத்தின்படி மேலும் ஒராண்டுக்கு நீடித்து வழங்கிட கிடைக்கப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் இந்நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் 20-11-2020 அறிக்கையின் படியும் தொடர்ந்து மூன்றாவது ஆண்டிற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3631**

**ஒரு ஆண்டுக்கு நீடித்து அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண். 5**

விளவங்கோடு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-2021-ல் குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் அரசு போக்குவரத்து கழகம் பணிமனை (TNSTC) வளாகத்தினுள் சிமென்ட் காங்கீரிட் தளம் அமைக்க ரூ.9,90,000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கு 18-12-2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.D. Premekumar | 9.90 | மதிப்பீட்டை விட 1.49% கூடுதல் (8,63,540) |
| 2 | Thiru.D. Justinkumar | 9.90 | மதிப்பீட்டை விட 0.07% குறைவு (8,50,188) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.7% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.D. ஜெஸ்டின்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3632**

**அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.6**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN.74Z4605-க்கு 6 டயர்களும் பழுதடைந்துள்ளதை மாற்றியமைக்க மதிப்பீடு ரூ.95400/-க்கு புதியதாக 6 டயர்கள் வாங்கிட மூன்று உள்ளூர் விலைப்புள்ளி வரப்பெற்றதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | சொக்கலிங்கம் நாடார் டயர் சோண், மார்த்தாண்டம் | 95400 |
| 2 | ஜெகின் டயர்ஸ்,மார்த்தாண்டம் | 96700 |
| 3 | எ.கே. டிடோர்ஸ்,மார்த்தாண்டம் | 96300 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள சொக்கலிங்கம் நாடார் டயர் சோண் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3633**

**அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.7**

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் அலுவலகத்திலுள்ள ஜெரேட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட 2020-2021-ம் வருடத்திற்கு வருடாந்திர பராமரிப்பு செலவு ரூ.2,95,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3634**

**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>குழித்துறை நகர்மன்றத்தின் 18-12-2020 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள் மற்றும் தீர்மானம்</u>**

குழித்துறை நகராட்சியில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் (FSTP) செயல்படுத்திட அரசாணை எண்.88, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31-08-2018-ன்படி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சியின் எல்கைக்குட்பட்ட பகுதியில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்பம்மம் குப்பை கிடங்கில் கசடு கழிவு சுத்திகரிப்பு திட்டம் செயல்படுத்திட சேகரமாகியுள்ள குப்பைகளில் Bio Mining முறையில் தேவையான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் மேற்படி திட்டம் செயல்படுத்திட ரூ.340 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இப்பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3627, நாள் 18-12-2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

ஒப்பம்/- திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.